

# தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்



தொகுப்பாசிரியர்

ப.பிரதாப்



"காலத்திற் கேற்ற வகைகள் அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்று மில்லை"

சுப்பிரமணிய பாரதியார்

ISBN 8193796381
9788193796382

தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்
(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)

தொகுப்பாசிரியர்
ப. பிரதாப்

உரிமை
ஆசிரியருக்கே

முதற்பதிப்பு
அக்டோபர், 2019

வெளியீடு
தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

வடிவமைப்பு, அச்சு
பாலகீதா மீடியா, பொள்ளாச்சி, 99761 44451

பக்கங்கள் : 18 + 398 = 416

விலை: ரூ. 450/-

ISBN : ISBN 819379638-1
9788193796382

# 44. குறுந்தொகையின் காலமும் சூழலும்

**ப.கார்த்தி**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, என்.ஜி.எம் கல்லூரி,
பொள்ளாச்சி.

## முன்னுரை

தமிழ் மொழியின் சிறப்புகளை வெளிப்படுத்தும் வடிவ கருவூலம் சங்க இலக்கியம் எனலாம். இக் கருவூலத்தில் பாட்டும் தொகையும் என பதினெட்டு நூல்கள் உள்ளன. பதினெட்டு நூல்களை செம்மொழிப் பண்புடைய நூல்களாக அறிஞர்கள் பாராட்டியுள்ளனர் நூல்களின் பெயர்களை

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று
இத்திறந்த எட்டுத்தொகை"

என்ற பாடல் விளக்குகிறது. இவற்றுள் நல்ல குறுந்தொகை எனப் போற்றப்படும் நூலின் காலம் மற்றும் குறுந்தொகைப் பாடல்கள் தோன்றிய சூழலை விளக்குவதாக இவ்வரங்கக் கட்டுரை அமைகிறது.

## குறுந்தொகை அறிமுகம்

பலர் பாடிய இந்நூலினுள் பலர் பாடிய பாடல்கள் இடம் பெற்றுள்ளன. பாடல்கள் நானூறு பாடியோர் இவர்கள் தங்களது பாடலை தனித்தனிச் சூழலில் இயற்றியுள்ளனர் பாடல்களின் பல்வேறு வகையான மையப்பொருள் அமைந்துள்ளது.

தமிழ் நூல்களை பேணிப் பாதுகாத்து தமிழ் ஆசான்கள் சங்க நூல்களை தொகுத்துள்ளனர். அவ்வகையில் ஒவ்வொரு நூலில் பாடலடி பாடலில் இடம் பெற்றுள்ளன. கைக்கோள் ஐந்திணை மக்களது வாழ்வு வழிபாட்டுச் செய்திகள் என்ற அடிப்படையில் புரிக்கோ இந்நூலினைத் தொகுத்துள்ளார்.

நூலினைத் தொகுத்த தொகுப்பாளருக்கு உணவு, உறைவிடம் ஆகியவற்றை வள்ளல்கள் வழங்கியுள்ளனர். இந்நூலுக்குரிய வள்ளலின் பெயரை அறிய இயலவில்லை இந்நூல் குறுகிய அடிகளைக் கொண்டது அதாவது நான்கு முதல் எட்டு அடிகளைக் கொண்டப் பாடல்களை உடையது.

தமிழ் இலக்கிய வரலாறு மூன்று சங்கங்கள் பற்றி பேசுகிறது. முதல் சங்கத்தில் அகத்தியமும் இரண்டு மற்றும் மூன்றாவது சங்கங்களில் தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய நூல்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றின் காலத்தை முதற்சங்கம் 4449 ஆண்டுகள் எனவும், இரண்டாவது சங்கம் 3700 ஆண்டுகள் எனவும், கடைச்சங்கம் 1850 ஆண்டுகள் நடைபெற்றுள்ளன. என இலக்கிய வரலாற்றா சிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதனால் சங்க இலக்கியங்களுக்கு கால எல்லை தெளிவாக குறிப்பிட இயலாது எனினும் ஏறத்தாழ ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் இந்நூல்கள் தோன்றி இருக்கலாம் என்பதே முடிவு இக்காலத்தில் கவிபாடும் புலவர்களாக கவிஞர்களாக பலதரப்பட்ட மக்களும் விளங்கி யுள்ளனர். சான்று, குறுந்தொகையை பாடிய புலவர்கள் 205 பேர் இவர்களுக்குள் எவ்வி, எழினி, குட்டுவன், கொங்கர், நன்னன், பசும்பூட்பாண்டியன், இவர்கள் ஆளும் மரபை சாரசுந்தவர்கள் சாதாரண மக்கள் ஆலங்குடி வங்கனார், ஔவையார், கபிலர், கோவூர்கிழார், மாங்குடி மருதன்.

### தொழில் செய்வோர்

மதுரைக் கொல்லன், மதுரை பெருங்கொல்லன், மதுரை மல்லனார். பெண்கள், வெள்ளி வீதியார், அவ்வையார்.

### குறுந்தொகை சூழல்

குறுந்தொகையில் முதல் பாடல் தோழி கூற்றாக அமைந்துள்ளது. இதில் முருகன் அரக்கர்களை அழித்த வரலாறு கூறப்பட்டுள்ளது அவ்வரிகள்,

"செங்களம் படக் கொன்று அவுணர்த் தேய்த்த
செங்கோல் அம்பன் செங்கோட்டு யானை
கழல் தொடிச் சேஎய் குன்றம்" (குறுந்.1)

இதன் மூலம் தமிழ் கடவுளாகிய முருகனது வழிபாட்டின் பழமையினை உணர முடிகிறது.

"கழனிமா அத்து விளைந்து உகு தீம்பழம்
பழன வாளை காதுஉம் ஊரன்" (குறுந்.8)

இப்பாடலில் வயலில் நின்ற மாமரத்தின் பழம் உதிர்ந்து அருகில் உள்ள நீர்நிலைகளில் விழுந்தமையும் அதனை வாளைமீன் கவ்விய தன்மையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்வழி நீர் வளம் மிகுந்தமையும் மீன்கள் கூட மாம்பழத்தினை சுவைத்த தன்மையை உணர முடிகிறது.

"எறும்பி அளையின் குறும்பில் சுனைய
உலைக்கல் அன்ன பாறை ஏறி,
கொடுவில் எயினர் பகழி மாயக்கும்
கவலைத்து என்ப, அவர் தேர்சென்ற ஆறே"

இப்பாடல் வரிகளில் நடைபாதையில் சுனைகள் இருந்தமையும் அருகில் இருந்த பாறையில் வேட்டுவர்கள் தங்களது அம்புகளை தீட்டிய தன்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு வேட்டையாடிய தன்மையும் வேட்டைக்குரியக் கருவிகளையும் உணரமுடிகிறது. இதன்வழி குறுந்தொகை காலத்தில் வேட்டைத் தொழில் இருந்தமை உணரலாம்.

## குறுந்தொகையில் உழவு வேளாண்மை

சங்ககால மக்களின் வாழ்க்கைச் சூழலோடு தொழிலும் ஒன்றி இருந்துள்ளது மக்கள் தன்வாழ்வோடு இணைந்த உழவுத் தொழிலைத் திட்டமிட்டுச் செயல்படுத்தி உள்ளனர்.

நிலத்தை உழுதல், விதைத்தல், நீர் பாய்ச்சுதல், களை பறித்தல், பயிர்ப் பாதுகாத்தல் எனத் திட்டமிட்டு வேளாண்மை செய்துள்ளனர். இவ்வேளாண்மையை திருவள்ளுவர்,

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை."

எனப் புகழ்ந்துள்ளார். உலகத்தார் எத்தகைய தொழில் செய்தாலும் உணவிற்கு உழவரையே சார்ந்து இருப்பர் அதனால் உழவே முதன்மைத் தொழில் என்பது வள்ளுவர் கூற்று.

### உழுதல்

நிலத்தின் மேற்பரப்பிலுள்ள கடினத்தன்மை கொண்ட மண்ணை மென்மைத் தன்மை ஆக்குவது ஆகும். இதனால் மண்ணுக்கு நல்ல காற்றோட்டம் கிடைக்கும் பயிர்கள் நன்கு காலூன்றி அதிக விளைச்சலைத் தரும்.

### விதைத்தல்

நெல் விதைத்தல், வரகு விதைத்தல், சாமை விதைத்தல் முதலியவை முல்லை மற்றும் மருத நில மக்களின் தொழில்கள் ஆகும். உழவர்கள் காலையில் விதைப்பதற்காக விதைகளை சிறிய பனையோலைக் கூடையில் எடுத்துச் சென்றுள்ளனர். இதனை,

"முதைப்புனம் கொன்ற ஆர்கலி உழவன்
விதைக்குறு வட்டி போதொடு பொதுளப்" (குறுந்.155)

என்று குறிப்பிடுகிறது.

"...... ஐவனம் வித்தி
அருவியின் விளைக்கும் நாடனொடு" (குறுந்.371)

என்ற பாடல் வழி நெல் விதைத்தமையை உணரமுடிகிறது.

### நீர் பாய்ச்சுதல்

வேளாண்மை நீர் பாசனத்தைப் பொறுத்தே அமைகிறது. பாசனத்துக்குத் தேவையான ஆற்று நீர் வாய்க்கால் வழியோடி வாய்க்காளைச் சேர்கின்றன.

"நெல்லுக்கு இறைத்த நீர்
வாய்க்கால் வழியோடி" (அவ்வையார்)

மருதநில வேளாண்மைக்கு காவிரி நீர் பாசனம் பயன்படுத்தப்பட்டுள்ளது அதனை

"....... காவிரிப்

பலர் ஆடு பெருந்துறை மருதொடு" (குறுந்.258)

குறிப்பிடுகிறது.

"மருத நிலத்தில் நீர் வளம் இருந்ததனை

பொய்கை ஊரன்" (குறுந்.61)

கூறுகின்றன.

வேளாண்மைப் பயன்பாட்டிற்காக குளங்கள் இருந்தமையை

"அம் தண் பொய்கை எந்தை எம்ஊர்" (குறுந்.354)

என்று குறுந்தொகை குறிப்பிட்டுள்ளதால் உணரலாம்.

## களைப்பறித்தல்

மழை பெய்தவுடன் தேவையற்ற பயிர்களின் வரவு பெருகிவிடும் இதிலிருந்து பயிர்களைப் பாதுகாக்க களைச் செடிகளை பறித்து எறிகின்றனர். குறுந்தொகையில் உழவர்கள் மலைநெல்லை விதைத்து விட்டு அதில் தேவையன்றி வளர்ந்துள்ள காட்டு மல்லிகையைப் பறித்து எறிந்து விடுவர் என்று களையெடுத்தல் பற்றிய செய்தியை,

"அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்

பருஇலைக் குளவியொடு பசுமரல் கட்டும்

காந்தள் அம் சிலம்பில் சிறுகுடி பசித்தென" (குறுந்.100)

என வரும் பாடல் வரிகளால் உணரலாம். உழவன் பயிர் வளர்வதில் இருந்து செடிகள் பெரிதாகும் வரையிலும் களைகள் விடாமல் பாதுகாத்தலை விளக்குகிறது.

## பயிர்ப் பாதுகாப்பு

பூச்சிகள், விலங்குகள், பறவைகள் போன்றவைகளிடமிருந்து பயிர்களை பாதுகாப்பதை பயிர்ப் பாதுகாப்பு

என்பர். பழந்தமிழர்கள் இப்பயிர் பாதுகாப்பிலும் இயற்கையோடு இயைந்த முறைகளையேப் பின்பற்றி உள்ளனர்.

மரம், செடி, கொடிகளைச் சுட்டுப் பண்படுத்திய நிலத்தில் தழைத்த தினையைக் காக்கும் குறிஞ்சி நிலத் தலைவி கிளிகளை விரட்ட 'குளிர்' என்ற கருவியைப் பயன்படுத்தினாள் என்ற செய்தியை,

"சுடுபுன மருங்கில் கலித்த ஏனற்
படுகிளி கடியும் கொடிசிகைக் குளிரே" (குறுந்.291)

என வரும் வரிகள் குறிப்பிடுகின்றன.

கிளி விரட்ட பயன்படுத்தியக் கருவி 'கிளி கடி' கருவியாகும் இதனைக் குறுந்தொகை,

"…. உண்கிளி கடியும் கொடிச்சிகை குளிரே," (குறுந்.360)

எனும் பாடல் குறிப்பிடுகிறது. மேற்குறிப்பிட்டச் செய்திகளின் வழி உழவுத்தொழிலின் துணைத் தொழில்களில் பெண்கள் ஈடுபட்டு இருந்தமையும் குறிப்பாக விளைச்சல் நிறைவுறும் நேரத்தில் அழிவு படாமல் காத்தப் பெருமையைப் பெண்கள் பெற்றுள்ளனர்.

## முடிவுரை

மேற்கண்ட செய்திகளைத் தொகுத்து நோக்குமிடத்து தமிழர்களின் மரபுசார் உழவுத் தொழிலை நன்கு விளங்கிக் கொள்ள முடிகிறது. மேலும் தமிழர்கள் இயற்கையோடு இயந்த உழவுத் தொழிலையே செய்து வந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.